**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

**CC.NO. 417/2011 LW- 5 PW-6**

| | |
|---|---|
| Name | முரளிதரண் |
| Husband/Father Name | ரகுராமன் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | அரசு ரப்பர் கழகம், உதவி வன பாதுகாவலர் மற்றும் விஜிலன்ஸ் அலுவலர் |
| Age | 49 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 20.02.2026 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது. .

**(எதிரி 2, 3, 6ஆஜர். எதிரி 5 மற்றும் 7 ஆஜரில் இல்லை. 5 மற்றும் 7 எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் கழகத்தில் உதவி வன பாதுகாவலர் மற்றும் விஜிலன்ஸ் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.12.2010 அன்று வேலூர் சமூக காடுகள் சரக மாம்பாக்க பிரிவு வனவராக பணிபுரிந்து வரும்போது ஆற்காடு வனசரக அலுவலருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் ஆற்காடு வனசரக அலுவலர் திரு.காளிதாஸ், வனவர் திரு.ஜெயகுமார், வனகாப்பாளர் திரு. ரேணுகோபால், வனகாப்பாளர் திரு. ஆறுமுகம் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவினர் ஆற்காடு சரகவாகனம் TN 23 0452 வாகனத்தில் அரக்கோணம் சமூக காடுகள் சரக வனசரக அலுவலர் திரு.ஜெயசந்திரன் வனவர் திரு.பாலாஜி ஆகியோருடன்

நானும் மற்றொரு வாகனம் TN 21 0301 ல் புலிங்கண்ணு முதல் காரை செல்லும் சாலையில் நவலாக் கூட்ரோடு அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது நவலாக்லிருந்து வெள்ளை நிற ஆம்னி வேன் வந்ததை கண்டு வாகனத்தை தடுத்து நிறுத்தி சோதனை செய்தோம். சோதனையில் வாகனத்தில் ஏதோ கட்டைகள் இருப்பது தெரியவந்ததில் சோதனை செய்தபோது அவையாவும் செம்மர கட்டைகள் என தெரியவந்தது.

மேலும் வாகனத்தில் இருந்த நபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பின்பு வாகனத்திலிருந்த செம்மர கட்டைகள் வரிசைபடுத்தி நீளம், சுற்றளவு எடுக்கப்பட்டு எச் நமுனாவில் திரு.ரேணுகோபால் வனகாவலர் குறித்துக்கொண்டார். வாகனத்தின் விவரங்களும் அதில் பதிவு செய்யப்பட்டது. பின்பு சம்பவ இடத்திலேயே திரு.ஆறுமுகம் வனகாவலர் அரசு தரப்பு மகசரில் பிடிப்பட்ட செம்மர கட்டைகள் மற்றும் வாகனத்தின் விவரங்கள் பதிவு செய்ப்பட்டு எதிரிகள் மற்றும் அரசு தரப்பு சாட்சிகளின் கையொப்பம் பதிவு செய்யப்பட்டது.

என்னிடம் காண்பிக்கப்படும் அரசு தரப்பு மகசரில் உள்ள ஐந்தாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.27** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பிடிப்பட்ட எதிரிகளிடம் சம்பவ இடத்திலேயே ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதில் சரவணன் S/o. பலராமன் என்பவரிடம் என்னால் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதில் சாட்சிக்காக உடன் வந்த குழுவினரிடம் கையொப்பம் பெற்று எதிரிடம் கையொப்பம் பெறப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ28** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மற்ற எதிரிகளான பாலாஜி, ராஜேந்திரன், ராஜேஷ் ஆகியோர்களிடம் குழுவில் என்னுடன் வந்த அலுவலர்கள் தனித்தனியே ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் நான் சாட்சி

கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் மேற்குறிப்பிட்ட எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள நான்காவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்துகள் முறையே **அ.சா.ஆ.29,30 மற்றும் 31** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு பிடிப்பட்ட வாகனம், செம்மர கட்டை, மற்றும் எதிரிகளுடன் ஆற்காடு வனசரக அலுவலகத்திற்கு கொண்டு வந்து வழக்கு எண்.4/2010 என வாகனத்தின் மீதும் கட்டையின் மீதும் திரு.ஆறுமுகம் வனகாப்பாளரால் மஞ்சள் நிற பெயிண்டினால் எழுதப்பட்டது. பின்பு திரு.ஜெயகுமார் வனவரால் கட்டைகளின் மீது ஆற்காடு வனசரகர் ஆமர் குறியீடு 14^ பதிவு செய்தார். கைப்பற்றப்ட்ட செம்மர கட்டைகளை நானும் திரு.பாலாஜி வனவரும் எடை போட திரு.ரேணுகோபால் எடையை பார்த்து வனவர் ஜெயகுமார் கூற அவர் படிவம் 95 சொத்து விவர பட்டியலில் குறித்துக்கொண்டார்.

பின்பு மாலை உப்புபேட்டை முதல் திமிரி சாலையில் வாகன தணிக்கையில் ஈடுபட்ட போது வாகனத்தில் வந்த சந்தேகத்திற்கு இடமான நபரை தடுத்து நிறுத்தி விசாரணை மேற்கொண்ட போது அவர் செம்மர கடத்தலில் ஈடுப்பட்டதும். காலை பிடிப்பட்ட எதிரிகளுக்கும், இவருக்கும் தொடர்பு இருப்பதாகவும் இவரும் இந்த செம்மர கட்டை கடத்தலில் ஈடுபட்டதும் விசாரணையில் தெரியவந்தது. அவரிடம் திரு.ஜெயகுமார் வனவரால் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதில் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி அமிர்தராஜ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள நான்காவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.32** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு பிடிப்பட்ட எதிரி மற்றும் குழுவினருடன் ஆற்காடு வனசரக அலுவலகத்திற்கு வரப்பட்டது.

**<u>2 மற்றும் 3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தகவல் தெரிந்ததன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்றதாக கூறுகிறேன். எவ்வாறு தகவல் கிடைத்தது என்றால் ஆற்காடு வனசரக அலுவலரும் அரக்கோணம் சமூக காடுகள் சரகரும் தகவல் தெரிவித்தன் பேரில் சென்றேன். நான் வேலூர் வனசரகரின் கீழ் பணி செய்ததாக கூறும் போது எனக்கு எவ்வாறு தகவல் கிடைத்தது என்றால் நான் ஆற்காடு வனசரக(வனங்கள் ஆட்சி) எல்லைக்குட்பட்ட வேலூர் சமூக காடுகள் சரகமான மாம்பாக்க பிரிவு வனவராக பணிபுரிந்ததால் எனக்கு தகவல் கிடைக்கப்பெற்றது. அந்த தகவல் எனக்கு எழுத்து பூர்வமாக அளிக்கப்ட்டதா அல்லது வாய் மொழி மூலமாக அளிக்கப்பட்டதா என்றால் எனக்கு அலைபேசி மூலமாக தகவல் அளிக்கப்பட்டது.

நான் மாம்பாக்கததிலிருந்து அங்கு சென்றதற்கு Movement Register ல் பதிவு செய்தேனா என்றால் அவ்வாறு பதிவேடு எங்களுக்கு இல்லை. Movement Register இல்லாமல் எனது மேல் அதிகாரிக்கு நான் எங்கு வேலை செய்கிறேன் என்று எவ்வாறு தெரிவிப்பேன் என்றால் வார நாட்குறிப்பு வாயிலாக பதிவு செய்து வனசரக அலுவலருக்கு அனுப்பபடும். இவ்வழக்கு சம்பவத்தின் போது எனக்கு தொலை பேசி மூலம் தகவல் பெறப்பட்டு ஆற்காடு வனசரக அலுவலருடன் சம்பவ இடம் சென்றதை பற்றி வார நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேனா என்றால் பதிவு செய்யப்பட்டது. ஆற்காடு வனசரக அலுவலகம் எங்கு உள்ளது என்றால் ராணிப்பேட்டையில் கோர்ட் வளாக தெருவில் உள்ளது. நாங்கள் வனசரக அலுவலர்களுடன் சம்பவ இடம் சென்றதாக கூறிகிறேன். எத்தனை மணிக்கு புறப்பட்டு எத்தனை மணிக்கு அங்கு சென்றோம் என்றால் புறப்பட்ட நேரம் எனக்கு சரியாக நினைவில் இல்லை. ஆனால் சம்பவ இடத்திற்கு காலை 11.30 மணிக்கு அங்கு வாகன தணிக்கையில் இருந்தோம்.

காலை 11.30 மணிக்கு முன்பாக வேறு எங்காவது வாகன தணிக்கையில் ஈடுபட்டோமா என்றால் ஆங்காங்கே ரகசிய தகவலின் படி சந்தேகம் ஏற்படும் வகையில் உள்ள இடங்களில் தணிக்கை செய்து பின்பு நவ்லாக் கூட்ரோட்டில் தணிக்கையில் ஈடுபட்டோம். நாங்கள் எவ்வளவு நேரம் சம்பவ இடத்தில் இருந்தோம் என்றால் செம்மர கட்டையுடன் வாகனம் பிடிப்பட்டவுடன் வந்துவிட்டோம்.

அப்படி என்றால் இந்த வழக்கிற்கான அனைத்து ஆவணங்களும் வனசரக அலுவலகத்தில் மட்டுமே தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாகனம் பிடிப்பட்டவுடன் H படிவம் சம்பவ இடத்தில் பதிவு செய்து அரசு தரப்பு மகசர் பதிவு செய்தும், எதிரிகளின் வாக்குமூலம் சம்பவ இடத்திலே தான் பெறப்பட்டது. அலுவலகம் வந்து படிவம் 95 மற்றும் சொத்து விவர பட்டியல் பதிவு செய்யப்பட்டது.

இவையெல்லாம் பதிவு செய்ய சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 1–1.30 மணிநேரம் ஆகியிருக்கும். சம்பவ இடத்தின் அருகே பொது மக்கள் குடியிருப்பு மற்றும் பள்ளிக்கூடம் உள்ளதா என்றால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. அது சாலை பகுதியாகும். அந்த இடம் பொது நபர்கள் புழங்ககூடிய இடம் என்றாலும், ஆனாலும் தனி நபர் சாட்சி இல்லை வனசரகர் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரிதான். செம்மர கட்டைகளுடன் ஒரு கார் பிடிப்பட்டதாக கூறுகிறேன் அது யாருக்கு சொந்தமானது என்று விசாரணை செய்யப்பட்டதா என்றால் விசாரணை செய்யப்பட்டது. அது தொடர்பான விவரம் எனக்கு நினைவில் இல்லை.

எதிரிகள் அனைவரிடமும் ஒரே நேரத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றப்பட்டது என்றால் சரிதான். ஒவ்வொரு எதிரியிடம் ஒவ்வொரு அலுவலகர் பெற்றார்கள். மகசரில் செம்மர கட்டைகளின் அளவீடகள் உள்ளன. எவ்வாறு அளவீடு செய்யப்பட்டது என்றால் டேப்பினால்

செய்யப்பட்டது. அளவீடு செய்வதற்கான உபகரணங்களை எடுத்து சென்றோமா என்றால் ஆமாம். எடை மட்டும் அலுவலகத்திற்கு வந்து போடப்பட்டது. அப்படியென்றால் படிவம் 95 வனசரக அலுவலகத்தில் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

நான்காம் எதிரிடம் நானே ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளேன். அதில் வனத்தின் எந்த பகுதியிலிருந்து அச்செம்மரம் வெட்டப்பட்டது என்று எதிரி கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். மாம்பாக்கம், செம்பரபாக்கம், தகரகுப்பம் செம்மர தோட்டம் மற்றும் பானாவரம் செம்மர தோட்டம் ஆகிய இடங்களிலிருந்து வெட்டி கடத்தப்ட்டதாக வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மரம் வெட்டப்பட்டதாக சொல்லும் இடங்களுக்கு எதிரிகளை அழைத்து சென்று அடையாளம் கண்டு அந்த இடங்களின் புகைப்படம் எடுக்கப்ட்டதா என்றாலும், பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டதா என்றாலும் இல்லை. நான் பிடித்ததாக சொல்லப்படும் செம்மர கட்டை எத்தனை வயதுடையது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கடந்த 15.02.2010 அன்று சம்பவயிடமான புளியங்கண்ணில் பிடிபட்ட செம்மரங்களின் அடிப்படையில்தான் பானாவரம், கலவை, வாழைப்பந்தல் மற்றும் சிப்காட் காவல்நிலையங்களில் தனித்தனியாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் நான் சம்மந்தப்பட்ட மாம்பாக்கம் பகுதிக்குட்பட்ட வாழைப்பந்தல் காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேன். மற்றவைப்பற்றி எனக்கு தெரியாது.

நான் பதிவு செய்த புகாரின் அடிப்படையில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தபோது வழக்கிற்கான முகாந்திரம் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதனை பற்றிய விவரம் எனக்கு தெரியாது. நான் புகார் அளித்த வழக்கு என்ன ஆனது என்று நான்

தெரிந்துக்கொள்ளவில்லையா என்றால் அதற்குள் பணி மாறுதலில் சென்றுவிட்டேன். சம்பவ நாள், தேதியன்று நான் பார்ட்டி சகிதம் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சம்பவயிடத்தில் எதிரிகளிடம் வழக்கு சொத்தை கைப்பற்றவில்லை என்றாலும், எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும் சரியல்ல.

எங்களால் ஏற்பட்ட இழப்பீட்டினை சரிசெய்ய வேண்டி பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்ததாக சொல்லும் அனைத்து ஆவணங்களும், வனச்சரக அலுவலகத்திலேயே தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. படிவம் 95 காப்புக்காவல் அறிக்கை அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டது. மற்றவை சம்பவயிடத்தில் பதிவு செய்யப்பட்டது.

**<u>7ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சாட்சியாக கையொப்பம் செய்த தாளில் நந்த (எ) நந்தகோபால் எனும் பெயர் இல்லை என்றால் சரிதான். நடக்காத சம்பவத்திற்கு நான் எனது மேலாதிகாரிக்கு பவ்வியப்பட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.</u>**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

Digitally signed by SADASIVAM POORNIMA
DN: cn=SADASIVAM POORNIMA, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.